செ. வெ.எண்: 637 நாள்:28.07.2010

**பல்வகை குறைபாடுடைய மற்றும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச மடக்கு சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டம்.**

**1500 பேருக்கு வழங்க ரூ 90 இலட்சம் நிதி ஒதுக்கீடு முதலமைச்சர் ஆணை**

பல்வகை குறைபாடுடைய மற்றும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச மடக்கு சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டம் 2008-2009 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 150 பேருக்கு மட்டும் இலவச மடக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்தகைய சக்கர நாற்காலிகள் கேட்டு விண்ணப்பம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த உபகரணத்தின் துணையுடன் மாற்றுத் திறனாளிகள், முடங்கி விடாமல் வெளி உலகத்தோடு தொடர்பு கொண்டு சமுதாய வாழ்வில் தங்களுக்குரிய பங்கை ஆற்றுவதோடு, இரயில் மற்றும் பேருந்துகளில் வெளியூர்களுக்குச் செல்லும் பொழுது இச்சக்கர நாற்காலியினை மடக்கி வைத்துக் கொண்டு குடும்பத்தாருடன் பயணம் செய்ய வழிவகுக்கும். மேலும் மடக்கு சக்கர நாற்காலிகள் கல்வி பயில்வது, உணவு உண்பது போன்ற தங்களது அன்றாட செயல்களைச் சுயமாக செய்து கொள்ள உதவியாக இருக்கும். இதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2010-2011 ஆம் நிதியாண்டின் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது, 1500 இலவச மடக்கு சக்கர நாற்காலிகள் ரூ. 90 இலட்சம் செலவில் பல்வகை குறைபாடுடைய மற்றும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து 1500 இலவச மடக்கு சக்கர நாற்காலிகள் வாங்கி வழங்குவதற்கு ரூ 90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாணை பிறப்பித்துள்ளார்கள். இவற்றை கொள்முதல் செய்து தகுதியுடையவர்களுக்கு விரைவில் வழங்க வேண்டுமென்று அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

**வெளியீடு:**

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை தலைமைச் செயலகம், சென்னை-9.